# பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர்

ஆர். பாலா

RP
REFORMED PUBLICATIONS
சீர்திருத்த வெளியீடுகள்

**பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர்**

*ஆர். பாலா*

*முதல் பதிப்பு: மார்ச்* 2021

***சீர்திருத்த வெளியீடுகள்***
6/87 *காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை* 600023.
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைபேசி:* +91 9445671113
*ஈமெயில்:* msjamesin@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த*
*மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.org
*வலைப்பூவைப் பார்க்கவும்.*

# அறிமுக வார்த்தைகள்

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் என்ற இந்த நூல் தமிழ் கிறிஸ்தவ உலகுக்குப் புதிதாக இருக்கலாம். இந்தத் தலைப்பில் தமிழில் கிறிஸ்தவ நூல்கள் இருந்தால் ஆச்சரியமே. அதை நான் சொல்வதற்குக் காரணம், பரிசுத்த ஆவியானவரின் செயல்கள் பற்றிய தெளிவான வேதஞானம் நம்மினத்துக் கிறிஸ்தவர்கள் மத்தியில் இல்லாமல் இருப்பதுதான். ஓரளவுக்குப் புதிய ஏற்பாட்டுக்கால பரிசுத்த ஆவியானவரின் செயல்முறைகள் பற்றி விசுவாசிகளும் பிரசங்கிகளும் அறிந்திருந்தாலும், பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் செயல்முறைகள் பற்றி பொதுவாகவே தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் பெரும்பாலானோர் ஞானமற்றவர்களாகவே இருந்துவருகின்றனர்.

கீழைத்தேய நாடுகளில் இறையியல் கல்லூரிகளிலும், போதகர்கள் மத்தியிலும் பழைய ஏற்பாட்டு இறையியல் ஞானமும், பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் செயல்முறைகள் பற்றியும் அவசியமான அளவுக்குத் தெளிவான ஞானம் இல்லாமலிருப்பதைக் கவனிக்க முடிகின்றது. அதற்கு காலசகாப்த இறையியல் போதனை (Dispensationalism) ஒரு முக்கிய காரணமாக இருந்து வந்திருக்கிறது. அப்போதனையால் ஏதோவொருவிதத்தில் பாதிக்கப்பட்டிராத இறையியல் கல்லூரிகளோ, போதகர்களோ இல்லையென்றே சொல்லவேண்டும். அந்தளவுக்கு அப்போதனையின் ஆக்கிரமிப்பு கீழைத்தேய இறையியல் கல்லூரிகளிலும் போதகர்கள் மத்தியிலும் இருந்துவருகிறது. இந்தப்போதனை பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையை மட்டுப்படுத்தி,

அவர் தனிநபர்களுக்கு மறுபிறப்பை அக்காலப்பகுதியில் அளிக்கவில்லை என்ற போதனையைக் கொடுக்கிறது. இது மிகவும் தவறான போதனை. செயற்கையான காலக்கூறு போதனை மட்டுமல்லாது, தாராளவாத இறையியலும் பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் செயல்முறைகள் பற்றி அனேகர் வேதபூர்வமான நம்பிக்கைகளைக் கொண்டிராததற்குக் காரணமாக இருந்து வருகிறது.

பொதுவாக சீர்திருத்தவாத இறையியலறிஞர்களே பரிசுத்த ஆவியானவரின் பழைய ஏற்பாட்டுக் கிரியைகளைப்பற்றிய தெளிவான, வேதபூர்வமான விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் நன்றிகூற வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்நூலில் தமிழினத்தில் இன்று பரவலாகப் பிரசங்கிக்கப்படாமல், போதிக்கப்படாமல் இருந்துவருகிற பரிசுத்த ஆவியானவரின் பழைய ஏற்பாட்டுக் கிரியைகளை வேத அடிப்படையில் நான் விளக்கியிருக்கிறேன். இந்நூலில் நான் தந்திருக்கும் விளக்கங்களில் மேலும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள ஆங்கில வாசிப்புப் பயிற்சியுள்ளவர்கள் நான் குறிப்பிட்டிருக்கும் ஆங்கில நூல்களை வாசிக்கலாம். பரிசுத்த ஆவியானவரின் செயல்முறைகள் பற்றிய இறையியல் போதனையில் மேலும் நல்லறிவு பெற அவை உதவும்.

இன்றைய பிரசங்கிகளுக்கும், இறையியல் மாணவர்களுக்கும், இறையியலைப் போதிக்கின்றவர்களுக்கும் அவசியமான நூலிது. பரிசுத்த ஆவியானவர் பற்றிய இறையியல் போதனையளிக்கும் நூலாக இது இருந்தபோதும், சத்தியங்களை இலகுவாக விளக்க முனைந்திருக்கிறேன். இது கிறிஸ்தவர்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய நூல். அதுவும் ஒரு முறைக்கு மேலாகக் கவனத்தோடு வாசிக்க வேண்டிய நூல். ஆழமான சத்தியங்கள் மனதில் பதியவும், சிந்தித்து விளங்கிக்கொள்ளவும் மீள்வாசிப்பு அவசியமாகிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்களுக்கு இது தவிர்க்கக்கூடாத நூல் என்று சொல்லுவேன்.

பரிசுத்த ஆவியானவரின் பழைய ஏற்பாட்டு கிரியைகள்பற்றிய போதனையில் என் கண்களைத் திறந்துவைத்தவர் பேராசிரியர் ஜோன் வெயிட். 1980களின் ஆரம்பப் பகுதியில் அவரிடம் நான் பழைய ஏற்பாட்டு இறையியலைத் தென் வேல்ஸ்

வேதாகமக் கல்லூரியில் பயின்றேன். அவர் இலண்டன் வேதாகமக் கல்லூரியில் 1961ல் தந்திருந்த ஒரு விரிவுரையே இந்நூலுக்கு அச்சாணியாகத் துணைபுரிந்தது. அதை நூலில் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த விரிவுரை இன்று அச்சில் இல்லை. பேராசிரியர் ஜோன் வெயிட் பழைய ஏற்பாட்டு இறையியலில் ஜாம்பவான். அவருடைய மாணவர்களும், சக விரிவுரையாளர்களும், இறையியலறிஞர்களும் அதை உணர்ந்திருந்தார்கள். அவருடைய இறையியல் ஞானத்திற்கு அவர் எத்தனையோ நூல்களை எழுதிக் குவித்திருக்கலாம்; இருந்தும் அவர் அதில் நாட்டம் காட்டவில்லை. எசேக்கியல் நூலுக்கு அவர் எழுதிய வியாக்கியானத்தை வெளியீட்டாளர்கள் அதில் சில மாற்றங்கள் செய்யவேண்டுமென்று சொன்னபோது அதை அவர் வெளியிடாமலேயே விட்டுவிட்டார். அது ஒரு பெரிய இழப்பு. பேராசிரியர் வெயிட் பழமைவாத வேத இறையியலறிஞர். வேதத்தை உலக விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து தாராளவாத விளக்கங்கொடுப்பதற்கு அவர் ஒருபோதும் இடங்கொடுக்கவில்லை. தேவபயத்தோடு வேதத்தை அணுகும்முறையை அவர் மாணவர்களுக்குக் கற்றுத் தந்தார். அவரைப்போன்ற, வேத அதிகாரத்தில் நம்பிக்கைகொண்ட பக்திமான்களான இறையியலறிஞர்கள் இன்று மிகக் குறைவு. அவரோடு நான் செலவிட்டிருந்த காலப்பகுதியில் கற்றவை அனேகம். பிரசங்கிப்பதிலும், இறையியல் போதனையளிப்பதிலும், ஜெபிப்பதிலும், பழகுவதிலும், ஆத்மீக ஆலோசனையளிப்பதிலும் அவர் ஒரு சீர்திருத்த, பியூரிட்டன் போதகர் போல செயல்பட்டிருந்தார்.

இந்நூல் உருவாகக் காரணமாக இருந்த நம்மைச் சார்ந்த தமிழ் கிறிஸ்தவ சபைகளுக்கும் அவர்களுடைய போதகர்களுக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். கோவிட்–19 காலத்தில் இணையவழி மூலமாக இந்தப் போதனையை அளிக்க அவர்களே காரணமாக இருந்தார்கள். இப்போதனைகளை நூல் வடிவில், எப்போதும் போல் பிழைதிருத்தங்கள் செய்து அழகாக அச்சிட்டு வெளியிடும் சகோதரன் ஜேம்ஸுக்கும், பிழைதிருத்தங்கள் செய்து துணைபுரிந்திருக்கும் சகோதரன் பாலசுப்பிரமணியத்திற்கும், எழுத்துப்பணியில் ஜெபத்தோடு

துணைநின்று வரும் என் சபையாருக்கும், என் மனைவிக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்நூலை எனக்கு ஆசானாக இருந்திருக்கும் பேராசிரியர் ஜோன் வெயிட்டுக்கு நன்றியோடு அர்ப்பணிக்கிறேன். சீர்திருத்த வெளியீடுகளுக்கும் என் நன்றிகள்.

ஆர். பாலா
ஆக்லாந்து, நியூசிலாந்து
*2021*

# 1

திரித்துவத்தின் மூன்றாம் ஆள்தத்துவமாக இருப்பவர் பரிசுத்த ஆவியானவர். பரிசுத்த ஆவியானவர் கடவுள். கர்த்தரின் செயல்கள் அனைத்திலும் திரித்துவ ஆள்தத்துவங்களின் பங்குண்டு. அதாவது, ஒருவராயிருக்கின்ற கடவுளின் எந்த செயலிலும் மூவரின் பங்கில்லாமலில்லை. திரித்துவ ஆள்தத்துவங்களாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் எப்போதும் இணைந்தே செயல்படுவதால் அவர்களின் எந்தச் செயலிலும் ஒவ்வொருவரின் முத்திரையையும் காணலாம். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்து, வாழ்ந்து பணிபுரிந்தபோது, பிதாவும், பரிசுத்தஆவியானவரும் அவரில் தொடர்ந்திருந்தனர். திரித்துவ ஆள்தத்துவங்கள் பிரிக்கமுடியாதபடி இணைந்திருந்தபோதும், அவர்கள் ஒவ்வொருவரிலும் மெய்யான தனித்துவமும் காணப்படுகின்றது என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டிருக்கும் விதத்தைப் பற்றிப் பொதுவாக கிறிஸ்தவர்கள் கேள்வி எழுப்புவதில்லை. அவருடைய செயல்களைப் புதிய ஏற்பாடு முழுவதும் நாம் வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் எந்தவிதமாக இருக்கின்றன என்ற கேள்வி எழுகிறபோதே, பொதுவாக கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் வேறுபட்ட கருத்துவேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றனர். முக்கியமாக, அவருடைய செயல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதாக அநேகர் கருதுகின்றனர்.

பொதுவில் பெரும்பாலானோர், புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டிருக்கும் விதமாகப் பழைய ஏற்பாட்டில் செயல்படவில்லை என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதை இறையியல் அறிஞர்கள் மத்தியில் காண்கிறோம். திரித்துவக் கடவுளின் முக்கியமான ஆள்தத்துவமாக இருந்துவரும் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைப் பற்றிய குழப்பமான எண்ணங்களைக் கொண்டிருப்பது கிறிஸ்தவர்களுக்கு நல்லதல்ல. இந்த நூல், பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை ஆராய்ந்து விளக்கும்வகையில் எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்களும், பிரசங்கிகளும் பரிசுத்த ஆவியானவர் பற்றிய தெளிவான இறையியல் நம்பிக்கைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே நூலாசிரியரின் நோக்கம்.

### பரிசுத்த ஆவியானவரின் தன்மை

பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை நாம் வேதம் முழுவதும் வாசிக்கிறோம். அதாவது, பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அவற்றைப் பற்றி வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் திரித்துவ தேவன் என்பதை நாம் உணரவேண்டும். அதாவது, அவர் திரித்துவத்தில் மூன்றாம் ஆள்தத்துவமாக, நபராக இருக்கிறார். பிதாவும், குமாரனும் எப்படியோ அதேபோல அவரும் தேவன், ஆண்டவர். உண்மையில் அவர் பிதா, குமாரனோடு சமமான தன்மையையும், சமமான வல்லமையையும், சமமான அதிகாரத்தையும் தன்னில் கொண்டு தேவனாக, ஆண்டவராக இருந்துவருகிறார். பரிசுத்த ஆவியானவரை பிதா, குமாரனைவிடக் குறைந்த தகுதியுள்ளவராக நாம் ஒருபோதும் எண்ணக்கூடாது. அத்தோடு பரிசுத்த ஆவியானவர் ‘ஆவியானவர்’ என்ற பெயரில் வேதத்தில் அழைக்கப்பட்டிருப்பதால் அவரை ஒரு நபராகப் பார்ப்பதைத் தவிர்க்கக்கூடாது. பிதாவுக்கும், குமாரனுக்கும் நாம் கொடுக்கின்ற அதே இடத்தைப் பரிசுத்த ஆவியானவருக்கும் கொடுக்கவேண்டும். அதேவேளை அநாவசியத்துக்கு பிதா, குமாரன் ஆகியோரைவிட, பரிசுத்த ஆவியானவரை அவர்களுக்கு மேல் உயர்ந்தவராக நினைக்கின்ற தவறையும் செய்யக்கூடாது.

*திரித்துவத்தைப் பற்றிய விளக்கத்தை 1689 விசுவாச அறிக்கை 3ம் அதிகாரத்தின் 3ம் பத்தி தருகிறது.*

> *'அவரது எல்லையற்ற தெய்வீக உள்ளியல்பில் பிதா, வார்த்தை அல்லது குமாரன், ஆவியானவர் மூவரும் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறார்கள். உள்ளியல்பு (சாரம்), வல்லமை, நித்தியம் ஆகியவற்றில் அவர்கள் அனைவரும் ஒருவரே. அதேவேளை ஒவ்வொருவரும் பிரிக்கப்படாத முழுமையான தெய்வீகத்தையும் உடையவர்களாய் இருக்கிறார்கள். பிதாவானவர் வேறெந்த உயிரினத்திலும் இருந்து பெறப்படவில்லை; அவர் எந்தவொரு உயிரினத்தாலும் தோற்றுவிக்கப்படாததோடு, எந்தவொரு உயிரினத்திலிருந்தும் தோற்றுவிக்கப்படவுமில்லை. குமாரன் தந்தையிடமிருந்து நித்தியமாய் தோன்றினவராய் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர், தந்தையிடமிருந்தும், குமாரனிடமிருந்தும் நித்தியமாய் வெளிப்படுகிறவராய் இருக்கிறார். தொடக்கமற்ற மூவருமே எல்லையற்ற ஒரே கடவுளாய் இருப்பதால் அவர்களுடைய இயற்கைத் தன்மையையோ, உள்ளியல்பையோ பிரித்துப் பார்க்கக் கூடாது. ஆனாலும், அவர்களுக்கிடையிலான தனிப்பட்ட உறவைக்குறித்தும் (அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் குடும்ப உறவு), அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் பல்வகையான செயல்கள் குறித்தும் வேதத்தில் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. கடவுளோடு நமக்குள்ள எல்லா ஐக்கியத்திற்கும், அவரில் நாம் தங்கியிருப்பதால் நாம் பெறும் ஆறுதலுக்கும் திரித்துவத்தைக் குறித்த இந்தக் கோட்பாடே அடிப்படையாக அமைகின்றது.'*

*அத்தோடு சீர்திருத்த வெளியீடுகள் வெளியிட்டிருக்கும் 'கிறிஸ்தவ வினாவிடைப் போதனைகள்' என்ற நூலில் 5–7வரையுள்ள வினாவிடைகள் திரித்துவத்தைப் பற்றிய விளக்கங்களை அளிக்கின்றன. திரித்துவம் பற்றிய ஒரு நல்ல ஆங்கில நூலை* (The Three are One), *இலகுவான நடையில் ஸ்டுவர்ட் ஒலியொட்* (Stuart Olyott) *என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த*

போதகர் எழுதி வெளியிட்டிருக்கிறார். இந்த ஆங்கில நூல் சிறிய நூலாக இருந்தாலும், திரித்துவம் பற்றிய மிகத்தெளிவான விளக்கங்களை அளிக்கிறது. அநேகருக்கு இதை நான் அறிமுகம் செய்துவைத்திருக்கிறேன். அது பல ஆண்டுகளுக்கு முன்பாக வெளிவந்து இன்றும் அச்சில் இருக்கிறது. திரித்துவம் பற்றி மேலும் அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் திருமறைத்தீபம் இதழ்களில் வெளிவந்திருக்கும் திரித்துவம் பற்றிய ஆக்கங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

### பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்

பரிசுத்த ஆவியானவரின் செயல்களைப்பற்றி கிறிஸ்துவின் மீட்பின் வரலாறான பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் நாம் வாசித்தபோதும், புதிய ஏற்பாடே நமக்கு அவரைப்பற்றிய மிகத் தெளிவான விளக்கங்களைத் தருகிறது. என்னுடைய பழைய ஏற்பாட்டு பேராசிரியர் ஜோன் வெயிட் (John Waite) ஒரு ஆக்கத்தில் இதுபற்றி விளக்கும்போது சீர்திருத்த இறையியல் அறிஞரான பென்ஜமீன் வோர்பீல்டின் (Benjamin Warfield) வார்த்தைகளை உதாரணங்காட்டுகிறார்: 'புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருப்பதைப்போன்ற பூரணமான விளக்கத்தை பழைய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவர்பற்றித் தரவில்லை' என்கிறார் பென்ஜமீன் வோர்பீல்ட்.

### அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

அ. கிறிஸ்துவின் மீட்பின் வரலாறு (Redemptive history) ஒரே நேரத்தில் நடந்து நிறைவேறியதாக இல்லாமல் படிமுறையாக வளர்ந்து வருகின்றதாக இருக்கிறது. மீட்பின் வரலாறு இன்னும் நிறைவேறவில்லை. அது வரலாற்றில் படைப்பில் ஆரம்பித்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது புதிய உலகமும், புதிய பரலோகங்களும் உருவாகின்றவரையில் தொடரும். புதிய உலகமும் பரலோகங்களும் உருவாகின்றபோதே அந்த வரலாறு பூரணத்துவத்தை அடைகின்றது. நாம் மீட்பின் வரலாற்றின் ஒரு பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆகவே, பழைய ஏற்பாட்டு மீட்பின் வரலாற்றில் ஒட்டுமொத்தமாக பரிசுத்த

ஆவியானவரின் செயல்கள் அனைத்தும் விளக்கப்படவில்லை. அந்தக் காலப்பகுதியில் அவர் செயல்பட்ட விதம்பற்றி மட்டுமே அங்கே விளக்கப்பட்டிருக்கிறது. அவரைப்பற்றிய மொத்தப்போதனைகளையும் விளங்கிக்கொள்ள நமக்கு பழைய, புதிய ஏற்பாடுகள் இரண்டும் தேவை. இதனால்தான் அனேகர் பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் செயல் பற்றி தெளிவாகத் தெரிந்திராமல் குழப்பத்தை அடைகிறார்கள்; பல கேள்விகளைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொஞ்சம் அமைதியாக இரண்டு ஏற்பாடுகளையும் முறையாக வாசித்து ஆராய்ந்து பார்ப்பார்களானால் ஆவியானவர் பற்றிய முழுப்போதனையையும் பெற்றுக்கொள்ளலாம். உதாரணத்திற்கு மகாத்மா காந்தியின் முழு வாழ்க்கையைப்பற்றியும் தெரிந்துகொள்ள அவர் சாகின்ற வரையில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நமக்குத் தேவை; அவருடைய வாழ்க்கையில் முப்பது வயதுவரை வாழ்ந்திருந்த நிகழ்ச்சிகளை மட்டும் வைத்து காந்தியின் முழுவாழ்க்கையையும் நாம் முழுமையாக அறிந்து ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாது. அதுபோலத்தான் பரிசுத்த ஆவியானவரின் செயல்கள் படிப்படியாகத்தான் வேதத்தில் பழைய ஏற்பாட்டில் இருந்து புதிய ஏற்பாடுவரை விளக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டை மட்டும் வாசித்து அவரைப்பற்றிய முழுமையான போதனையை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய அனேகருடைய தவறான எண்ணங்களுக்கும், போதனைகளுக்கும் காரணம் அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் பற்றிய பழைய ஏற்பாட்டுப் போதனைகளில் தெளிவான விளக்கம் இல்லாததுதான்; அவர்கள் பழைய ஏற்பாட்டை மட்டும் வைத்து பரிசுத்த ஆவிபற்றிய செயல்களுக்கு விளக்கங்கொடுக்க முயற்சிக்கிறார்கள்; அப்படிச் செய்வது தவறு.

ஆ. புதிய ஏற்பாட்டிலேயே பரிசுத்த ஆவியானவர்பற்றிய தெளிவான விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. அத்தோடு வேதத்தின் எந்தப் போதனை பற்றியும் பழைய ஏற்பாட்டை மட்டும் வைத்து ஒரு தீர்மானத்துக்கு வருவது முழுத்தவறு. பென்ஜமின் வோர்பீல்ட் இதுபற்றி விளக்கும்போது சொல்லுகிறார், ‘புதிய ஏற்பாட்டு ஆவியானவரின் கிரியைகள்பற்றி நாம் ஆர்வத்தோடு

முன்னோக்கிப் பார்க்கும்படியான சில அடையாளக்குறிப்புகளை மட்டும் பழைய ஏற்பாடு தருகின்றது. ஆனால், புதிய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவர்பற்றித் தரும் விளக்கங்கள் இல்லாமல் இந்த அடையாளக்குறிப்புகளை மட்டும் வைத்து ஆவியானவர்பற்றிய முழுப்போதனையையும் நாம் பெற்றுக்கொள்ள முடியாது' என்கிறார் வோர்பீல்ட்.

ஆவியானவர்பற்றிய முழுமையான விபரங்களைப் புதிய ஏற்பாடே தருகின்றது. ஆகவே பரிசுத்த ஆவியானவர்பற்றிய எல்லா உண்மைகளையும் அவர்பற்றிய புதிய ஏற்பாட்டுப் போதனைகளை வைத்தே தீர்மானிக்கவேண்டும். வேத விளக்கவிதிகளில் முக்கியமான ஒன்று – புதிய ஏற்பாடே பழைய ஏற்பாட்டிற்கான முழுவிளக்கத்தையும் தருகிறது என்பது.

இன்னொரு தவறையும் நாம் தவிர்ப்பது அவசியம். இதுவரை நான் விளக்கியிருப்பவற்றை வைத்து, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய முழு ஆள்தத்துவத்தையும், வல்லமையையும் பயன்படுத்தி, தான் செய்யவேண்டியதையெல்லாம் செய்யமுடியாதபடி கட்டுப்படுத்தப்பட்டிருந்தார் என்ற அநாவசியக் கருத்துக்கும் இடங்கொடுக்கக்கூடாது. அவருடைய செயல்களைப் பற்றி பழைய ஏற்பாடு குறைவான விளக்கங்களை மட்டுமே கொடுத்தாலும், பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய தன்மையில் மாறாமலும், தன்னுடைய ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்தி மீட்பின் திட்டத்தில் தனக்களிக்கப்பட்டிருந்த அனைத்துச் செயல்களையும் பழைய ஏற்பாட்டில் தொடர்ந்து செய்துவந்திருக்கிறார்.

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்பற்றி இன்று காணப்படும் தவறான போதனைகளுக்கான காரணம்:

இதற்கு இரண்டு காரணங்கள் இருப்பதாக பேராசிரியர் ஜோன் வெயிட் சுட்டிக் காட்டுகிறார்:

### *(1) வேத இறையியலை முறைப்படுத்தப்பட்ட இறையியலிருந்து முற்றாகப் பிரிப்பது.*

வேத இறையியல் (Biblical Theology) கிறிஸ்துவின் மீட்பின் வரலாற்றை, அது கால அடிப்படையில் எப்படி எங்கு

ஆரம்பித்து படிமுறையாக வளர்ந்தது என்பதை பழைய ஏற்பாட்டில் இருந்து ஆரம்பித்து விளக்குகிறது. இது படைப்பு, கர்த்தரின் வாக்குறுதிகள், அவற்றின் நிறைவேற்றம், கர்த்தரின் உடன்படிக்கை என்பவற்றையெல்லாம் மீட்பின் வரலாற்றின் அடிப்படையில் ஆராய்ந்து விளக்கும் இறையியல் ஒழுக்கமாக இருக்கிறது. அதாவது, வானத்தில் விமானத்தில் பறக்கும்போது கீழே இருக்கும் ஒரு நகரம் முழுவதையும் நாம் பார்க்க முடிவதுபோல், முழுவேதபோதனையையும் ஒரே நேரத்தில் கவனிக்க உதவும் இறையியல் ஒழுக்கமாக இது இருக்கிறது.

முறைப்படுத்தப்பட்ட இறையியல் (Systematic or Dogmatic Theology) வேத இறையியலில் இருந்து வேறுபடுகிறது. Systematic or Dogmatic Theology ஆகிய இரண்டு பெயர்களும் ஒரே கருத்தைக் கொண்டிருக்கின்றன. ஜேர்மன் மற்றும் நெதர்லாந்து இறையியலறிஞர்கள் Dogmatic என்ற வார்த்தையை விரும்பிப் பயன்படுத்தினார்கள். அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும் Systematic என்பதை நடைமுறைக்கேற்றதாகக் கருதிப் பயன்படுத்தினார்கள். இன்றும் பொதுவாக Systematic என்ற பதமே பயன்பாட்டில் இருந்து வருகிறது. இது வேத இறையியலின் பார்வையை விட வித்தியாசமானது. எப்படியென்றால், வேத இறையியல், முழு வேதத்திலும் கிருபையின் உடன்படிக்கையின் அடிப்படையில் மீட்பின் வரலாற்றை, அது எங்கு ஆரம்பித்து எப்படிப் பயணிக்கிறது என்பதை விளக்குவதாக இருக்கின்றபோது, இந்த முறைப்படுத்தப்பட்ட இறையியல், வேதத்தின் இறையியல் போதனைகள் அத்தனையையும் ஒவ்வொன்றாகத் தனித்தனியாக எடுத்து, அதுபற்றி முழு வேதமும் எத்தகைய விளக்கங்களைத் தருகிறது என்பதை முறைப்படுத்தித் தொகுத்து விளக்குகிறது. இதுவே இரண்டுக்கும் இடையில் இருக்கும் வேறுபாடு.

வேத இறையியலை இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள்:

1. பழைய ஏற்பாட்டு இறையியல்
2. புதிய ஏற்பாட்டு இறையியல்.